Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஜு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எரு] யாழ்ப்பாணம்:- சோபகிருது ஞூ ஆடிமீ உசஉ வெள்ளிக்கிழமை (9 August. 1963) [இல-கக

# சமயம்போதிக்கும் ஆசிரியர்கள் சமய தீட்சை பெறவேண்டும்

——————0——————

[அண்மையில் நடைபெற்ற சைவப் புலவர் பட்டதாரிகள் சங்க ஆண்டு விழாவில் சங்கத் தலைவர் சைவப் புலவர் வித்துவான் வ செல்லையா ஆற்றிய தலைமை உரை.]

முற்றொடர்—2

இன்னும் இரண்டு சைவப் பெரியார்களுக்குச் சைவச் சான்றோர் துணைக்கொண்டு அவர்களின் சமய நூல் அறிவும் சைவ மாண்பும் போற்ற வேண்டிக் கௌரவப் பட்டங்கள் வழங்குகின்றோம். ஒருவர் சித்தாந்தவித்தகர் என்ற பட்டத்தினையும் மற்றவர் சைவ பூஷணம் என்ற பட்டத்தினையும் சூட்டப்பெறுகின்றனர். இங்ஙனம் தொடர்ந்து இப்பணிகளைப் புரிய இறையருள் பாலிக்குமென்றே நம்புகின்றோம்.

நம் சங்கம் மூன்றாண்டு காலமாக சைவநற் பணியை புரிந்து வருகின்றது. இக் குறுகிய காலத்தில் சைவப் பணியை மேற்கொண்ட நாம் பெற்ற அனுபவங்களைச் சைவ மக்களுக்குச் சொல்லித்தான் வைக்கவேண்டியவர்களாகின்றோம். சைவப் பணி என்ற பேரில் எல்லாம் இலவசம் என்று கொள்ளும கருத்து நம்மவர்களிடையே பதிந்துள்ளது. இக் கருத்துத் தப்பானது. பொருந்தாததுங் கூட. இக் கருத்து நிலைக்குமென்றால் சைவத்துக்கு ஒரு கேள்வி அடையாளம போட வேண்டி நேரும். முற்றுப் புள்ளி பெறாத சைவத்திறகுக் கேள்விக் குறி போட முடியுமா?

சமயப் பிரசாரத்திலேயோ சமய போதனையிலேயோ மற்றையோர் வழியை நாம் பின்பற்ற வேண்டிவந்துவிட்டது. நால்வர் பெருமக்கள் நமக்கெல்லாம் வழிகாட்டியிருக்க அச் செந்நெறியிற படராது மறந்துறங்கும் நாம் வேறு என்ன செய்தோம். சைவத்துக்கும் தமிழுக்கும் வாழ்வை அர்ப்பணித்த நாவலர் ஐயாவையும் அவர் தம வரலாற்றினையும் நாம் மறக்கலாமா? அன்னவரின் நினைவை அவர்களின் நினைவுச் சின்னமாகத் துலங்கும் இவ்வித்தியாசாலையிற் காண வேண்டாமா? சைவபரிபாலனசபை சைவாசிரிய சங்கம், நாவலர் வித்தியாலயப் பஞ்சாயச் சபை, சைவப் புலவர் சங்கம் ஆதியன நாவலர் ஐயா அவர்கள் அடிச்சுவட்டில் நின்று பணி புரிகின்றன. இதனைமக்கள ...கொள்வதோடு அக்

கழகங்கள் சைவப் பணிகளைப் புரிய ஆக்கமும் ஊக்கமும் தரல் வேண்டும்.

நிற்க நம் அனுபவங்கள் சிலவற்றைசுருக்கமாக இங்கேதருகின்றேன். நாம் இந்தியாவுடன் பல வகையிலும் தொடர்பு கொண்டிருந்தோம். முக்கியமாக அறிவுத்துறையாகும்; இனிமேல் இத் தொடர்பும் கொள்ள முடியாத நிலை யேற்பட்டிருப்பதால் நமக்குத் தேவையான அறிவுக் களஞ்சியங்களாகும் நூல்களை நாமே யாத்தல் வேண்டும் அதனை நாம் மேற்கொள்ளும் வகையில் சித்தாந்த நூல் வெளியீட்டினை மேற்கொண்டுள்ளோம். அத் துறையில் வல்லுனரான சைவப்புல்வர் இ செல்லத்துரை அவர்களை நாம் பயன்படுத்தத் தவறக்கூடாது. அன்னாரின் சமயப்பணிகளை நாம் பாராட்டாமலிருக்க முடி

தொடர்ச்சி 4ம் பக்கம்

## நற் சிந்தனை

—:—

ஏக னனேக னிறைவனடி
வாழ்கவெனும்
மோக மறுக்குமொழி
கண்டுய்வ தெக்காலம்

## முன்னேஸ்வரம் திருவிழா

சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னநாத சுவாமி கோயில் திருவிழாக்கள் 7-8-63 புதன்கிழமை தொடங்கி நடைபெற்று வருகின்றன. இவ் விழாக்களின் இறுதிப் பகுதியாக 29-8-63 வியாழக் கிழமையில் இருந்து முறையே, சிவனடியார் திருவிழா, பிட்சாடணர் திருவிழா நடேசர் திருவிழா வேட்டைத் திருவிழா தேர்த்திருவிழா என்பவை நடைபெற்று வந்து இறுதி நாள் 3-9-63 செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழா நடைபெற இருககிறது.

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயேயென்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்று நில்லே.

x x x

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத தொண்டனார் வணங்கி மகிழ்ந்தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

## கனிஷ்ட பாடசாலைத்

### தராதரப் பத்திரப் பரீட்சை

### கார்த்திகை 1963

வடமாகாண ஆசிரிய சங்கத்தினால் நடாத்தப்படும் இப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பாடசாலை மாணவாகளிடமிருந்து 10-9-63-க்கு முன்பாகவும, தனிப்பட்ட பரீட் சார்த்திகளிட மிருந்து 15-8-63 க்கு முன்பாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் விண்ணப்பப் பத்திரங்களைக் கீழ்க்காணும் விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறியப்படுகிறது.

தலைவர்:-
திரு. K. முத்துவேற்பிள்ளை,
மானிப்பாய் இந்துக்கல்லூரி,
மானிப்பாய்.

காரியதரிசி:-
திரு, C. குணபாலசிங்கம்,
கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில்.

உப காரியதரிசி:-
திரு. C. பாலகிருஷ்ணன்,
கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில்.

# உள்ளூர் ஆலயங்களை அழியவிட்டு வெளியூர்க் கோயிலுக்கு யாத்திரையா?

[ஹேசாலையைச் சேர்ந்த 'விக்டன்' தோட்டத்தில் தமிழ்ப் பாடசாலையில், சைவ நீதிக் கழக ஆதரவில் சுந்தரர் குருபூசை சிறப்பாகக் கொண்டாடப் பட்டபோது சைவ நீதிக் கழகத் தலைவர் திரு அ. சபாபதிப்பிள்ளை விழாவிற்குத் தலைமைவகித்து ஆற்றிய உரைச் சுருக்கம்]

"ஒருநாட்டின் பெருமை அந்நாட்டின் கலை கலாசார வளர்ச்சியில்தான் தங்கி இருக்கின்றது. உலகத்திலே வேறெங்குமில்லாத சிறந்த முறையில் வானைத் தொடும் கோபுரங்கள், ஆலயங்கள் சிற்பக் கலையுடன் சிறப்புற்று தமிழ் நாட்டிலே விளங்குகின்றன. அத்தோடு சைவநெறியும் தழைத்தோங்கிற்று. அதற்கு அக்காலத்து அரசர்கள் போதிய ஆதரவு கொடுத்தார்கள்.

இப்பொழுது மக்கள் ஆட்சிக் காலம். ஆலயங்கள், சமயகூடங்கள் நிர்வாகக் குறைவினால் சீர்சிறப்பு இழந்து கீழ்நிலையில் இருக்கின்றன. எத்தனை எத்தனை ஆலயங்கள் நித்திய பூசை யில்லாது வெள்ளி, செவ்வாயில் கூட ஒரு திரி விளக்கே இல்லாமல் இருட்டடைந்திருக்கின்றன. இதை எண்ணுவார்கூட இல்லை.

மலைநாட்டில் மிகப் பிரசித்தி பெற்ற கோவில் குஞ்சுபரி நாகநாதச்சித்தர் சமாதி ஆலயம். ஈழத்தில் எல்லாப் பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் வருடாவருடம் வந்து குவியும் ஆலயம். இன்று கதவடைக்கப்பட்டு, கவனிப்பார் இன்றி இருட்டடைந்து இருக்கின்றது. இப்படி எத்தனை ஆலயங்கள் இருககின்றனர். தமிழினத்திற்கு இன்று வந்திருக்கும் இழிநிலைக்கு இதுவும் ஓர் முக்கிய காரணம்.

தாம் வசிக்கும் இடங்களில் ஆலயங்கள் இடிந்து இருட்டடையவிட்டு கோடிக் கணக்கில் கதிர்காம யாத்திரை [illegible] கள் [illegible] றார்கள். இம்முறை கதிர்காமத்தில் நேர்த்திக்கடன் செய்த பக்தர்களிடம் இருந்து முடிஇறக்க ரூபா 4-/ அறவிடப்படுகின்றது. இவ் வருடம் முடியிறக்கும் உரிமை ரூபா 50,000 த்திற்குக் குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றது கடலை வியாபாரம் செய்யும் வியாபாரிகள் சிறு இடத்திற்கு ரூபா 1250 கொடுக்கிறார்கள். பெரிய வியாபாரிகள் எவ்வளவு கொடுக்கிறார்களோ? நைவேத்தியம், அருச்சனை, அபிஷேகம், காணிக்கைகள் ஆகியவற்றின்தொகையைக் கணக்கிடவே முடியாது.

### ஆனால் கேவலமான நிலை

இவ்வாறு சேரும் பெருந்தொகைப் பணத்தில் எவ்வளவு பக்தகோடிகளின் நலனுக்குச் செலவு செய்யப்படுகின்றது.

பக்தகோடிகள் தங்க இடவசதிகள் மிகக் குறைவு. அங்கு கட்டப்பட்டிருக்கும் மலசல கூடங்கள் சுகாதார ஒழுங்கில்லாது மிகக்கேவலமான நிலையில் இருக்கின்றன.

## சைவாகமக் கிரியாபி விருத்திப் பிரசாரக் கூட்டம்

ஸ்ரீ இலங்காபுரியில் சிறப்புற்று விளங்குந் திருக்கோவில்களிலும் ஏனைய இடங்களிலும் நடைபெறுஞ் சமயக் கிரியைகளில் பங்கு பற்றுவோர்க்குப் பயிற்சியளிக்க வேண்டிய அத்தியாவசிய நிலை யேற்பட்டுள்ளது இந்தியாவினிருந்து, கிரியைகள் நிகழும் வேளையில் வல்லவர்கள் வந்து பங்குபெற இயலாமையே இதற்குக் காரணம்.

எனவே வேதம், ஆகமம், ஏனைய துணை நூல்களிலும் பயிற்சி பெறவும், கிரியாகாலங்களில் செயலில் நேரிடையாக ஈடுபட்டு அனுபவ மேற்படவும் வேண்டிய வழிவகைகளை வகுப்பதற்கென, முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகாஸமேத முன்னநாதஸ்வாமி ஆலயத்தில் (25-8-63) ஞாயிற்றுக்கிழமை பகல் 2 மணியளவில் ஒரு மாபெருங்கூட்டம் கூட இருக்கிறது

## மறைவுக்குத் தேற்றம்

வட இந்திய ஆனந்தாசிரமத்தைச் சேர்ந்த சுவாமி இராமதாஸ்அவர்கள் சென்ற ஆடி 25ம் திகதி சமாதி அடைந்ததைத் தொடர்ந்து அந்த ஆனந்தாச்சிரமத்தைச் சேர்ந்தவர்கள் நாட்டின் நாலாபக்கங்களிலுமுள்ள சுவாமிகளின் அன்பர்களுக்குத் தேற்றச் செய்திகள் அனுப்பியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சோபகிருது ஷு ஆடி மீ
உசஉ வெள்ளிக்கிழமை

## செம்மைக் கல்வி பயிற்றும் சீரியபணி

நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலைக்குப் பெரும பழமையொன்று உண்டு. நெறி முறை தவருது கல்வி கற்பிக்கப்பெறும நிலையம் என்ற புகழ் பெற்றேங்கி வந்த தனிச்சால்பு அதற்குரியது. ஐந்தாங்குரவரின் அமைப்புஇது. அவ்வுத்தமரின்பின்திரு. த. கைலாசபிள்ளை அவர்களும சுன்னைக் குமாரசுவாமிப்புலவர் அவர்களும இக்கழகத்தை மேலும எழச் செய்தனர் அந்தப் பெருமை நாவலர் நாட்டுக்குரியது. அவ் வழி நின்று தொண்டாற்ற வேண்டிய கடமை தமிழ மக்களுக்குரியது. இநத உண்மையை உணர்ந்த கல்விமான்கள் நாவலர் உயர்நிலைப் பள்ளியில் வட மொழிவகுப்பும திருமுறைப் பயிற்சியும செநதமிழ் இலககண இலக்கிய போதனையும் நிகழ்த்துவதற்குரிய ஒழுங்குகள் செய்திருக்கின்றனர் என்று அறிந்து இன்புறுகின்றேம். ஆசிரிய வேலையிலிருந்து ஒய்வெடுத்தும் இரவு பகலாகச் சைவ நெறி நாட்டும் சீரிய தொண்டாற்றுவதில் ஈடுபட்டமரா துழைத்துவரும் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை அவர்கள் ஆதரவுடன் வியாகரணசிரோமணி சீதாராமசாத்திரிகளும வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களும் இன்னும பல அறிஞர்களும இந்த நோக்கத்தைச் செய்கை முறையிற சிறப்புற அமைக்கும பொறுப்பையேற்றிருப்பது சைவ எழுச்சிக்கு அறிகுறியாகும்.

வடமொழிப் பாடத் திட்டம் சைவ நூற்றெளிவையும் மெய்யுணர்வையும சமய சாதனையையும ஒருங்கு பெற மாணக்கர்களுககு உதவியாக அமைந்திருககின்றது. அவ்வாறே திருமுறைப் பயிற்சியும் செந்தமிழ்ப் படிப்பும் ஒழுங்கு செய்யப் பெற்றிருக்கின்றன. கல்வியின் உண்மையான நோக்கம் என்னவென்று திருவாதவூரடிகளின் பயிற்சியை விளக்கிக் கடவுள் மாமுனிவர் அருளியவாறு, "தவ மணமும திருநீற்றின் றன்மணமும் தவருத சிவ மணமும் பெறக் கல்வச் செல்வி மணம் புணர்விக்கும் கலை நிலையங்களே சிறந்த கழகங்களாகும். ஆகவே நாவலர் சைவப் பிரகாச வித்தியா சாலை உயர்நிலைப் பள்ளி ஓங்கி ...

நேயர்கள் நெஞ்சம்

# தேசிய மயத் திட்டத்தால் சைவசமயத்துக்கு ஏற்படும் இடுக்கண்

—————:0:—————

அண்மையில் கொழும்பில் ஒரு சைவப் பெரியாரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் சித்தாந்தச் செம்மல் உயர்திரு. சித். கைலாசபிள்ளை அவர்களின் உறவினர். அவர் சிவபூசா துரந்தரர். இக்காலத்தில் கொழும்பில் சைவஒழுக்கத்தைக் கடைப்பிடித்து ஒழுகுபவரைக்காண்பது மகிழ்ச்சிக்குரியதாகும். அவர் ஈழ நாட்டிலுள்ள தமிழர்கள் முக்கியமாகக் கொழும்பிலுள்ளவர்கள். தமிழருடைய பண்பாட்டை நெகிழ விடுகிறார்கள் எனக் கூறிக் கவலையடைந்தார் வேட்டி அணியும் வழக்கத்தைக் கைவிட்டுப் பெரும்பாலோர் சாரங் கட்டுகிறார்களென்றும், வீட்டில் தமிழ் பேசுகிறார் களில்லையென்றும், சைவ உணவைக் கைவிடுகிறார்களென்றும் கூறினர். நீர்கொழும்பு, சிலாபம் முதலிய இடங்களில முற்காலத்தில் வசித்த தமிழர்கள் பெர்ணண்டோ, சில்வா என்றபெயர்களை வைத்துக் கொண்டு சிங்களத்தைப் பேசத் தொடங்கிச் சிங்களவர்களாக மாறி விட்டார்கள். அவர்களைப்போலக் கொழும்பிலுள்ள தமிழர்களும் காலகதியில் தமிழ்ப் பண்பாட்டையிழந்து சிங்களவர்களாகி விடுவார்களோவெனக்கூறி அப்பெரியார் கவலை அடைந்தார்.

கொழும்பில் ஆடிவேல் விழா நடைபெற்றது. இரண்டு தேர்கள் உலாவந்தன. ஒன்று புறக்கோட்டை சம்மாங்கோடு கதிர்வேலாயுத சுவாமியினுடையது. இத்தேர்த்திருவிழா தஞ்சாவூரைச்சேர்ந்த வர்த்தக அன்பர்களால் நடாத்தப்படுவது. மற்றையது செட்டியார் வீதியிலுள்ள கதிரேசன் கோயில் சுவாமியுடையது இத்தேர்த்திருவிழா கொழும்புச் செட்டிமாருடைய உதவியினல் நடைபெறுவது.

இவ்விழாக்கள் சென்ற வருடங்களைப்போலச் செந்தளிப்பாக நடைபெறவில்லை. நிருவாகிகளுக்கு அரசாங்கம் விதித்துள்ள சட்டங்கள் இதற்குக்காரணமெனக் கூறப்பட்டது. இந்தியாவிலிருந்து புலவர்களையும், இசை வல்லார்களையும முற்காலங்களில் அழைப்பார்கள். அவ்வாறு அவர்களை அழைக்க இம்முறை அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை. அரசாஙகம் இவ் வணிகப் பெருமக்களுடைய தொழில்களை இலங்கை மயமாக்கக்கருதி நடவடிக்கை எடுப்பதனல் அவர்களுடைய வருவாய் குறைந்ததும் இன்னெரு காரணம என்றும் கூறப்பட்டது கொழும்பு நகரத்திலே முருகப்பெருமானுடைய புகழை மக்கள் உணரச் செய்வது இவ்விழாக்கள். அவற்றைத் தொடர்ந்து நடத்த எங்கள்அரசாங்கம் குறித்த நிருவாகிகளுக்குத் துணை புரிதல் வேண்டும் மக்கள் சமய வாழ்வை நடத்த இவ் விழாக்கள அவசியமாகும்.

ஊன நடனத்தில் ஈடுபட்டிருக்கும் பெரும்பாலான மக்களுக்கு முருகப்பெருமானுடைய ஞான நடனத்தை உணர்த்துதற்கு ஏதுவாயுள்ள இவ்விழாக்களை செவ்வனே பக்தி முறையில் நடத்தும் சைவப் பற்றுள்ள நிருவாகிகளுக்கு எங்கள் அரசாங்கம் துணை செய்யுமானல் மக்கள் தெய்வ வாழ்க்கையை நடத்தப் பெருந்துணையாகவிருக்குமல்லவா?

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.
சைவபரிபாலன சபை.
யாழ்ப்பாணம். 5-8-63.

●

## சைவ அபிமானிகளுக்கு ஓர் வேண்டுகோள்

சைவ சமய அபிமானிகளென நாம் எங்களையே வியந்துகூறிப் பெருமைப் படுகிறேம். ஆனல் இது காலவரை தாய் நாட்டிலிருந்து குருமார்களும், சாஸ்திரிகளும், பிரசங்கிகளும் அடிக்கடி இங்கு வந்தும், தங்கியிருந்தும், எங்களுடைய கோவில்களிலும், வீடுகளிலும் சமயாசார முறைப்படி கும்பாபிஷேகாதிகாரியங்களை வந்து நடத்தியும், சமய அறிவைப் புகட்டியும் வந்துள்ளார்கள்.

இதுகாலம்வரை நிரந்தரமான சமயக்கிரியாகாண்ட கல்விகளைப் புகட்டக்கூடிய ஸ்தாபனங்கள் ஒன்றிரண்டே இருக்கின்றன.

இந்த இலங்கையில் மூவாயிரத்துக்குக் குறையாத சைவாலயங்களும், மூன்று இலட்சத்திற்குக் குறையாத சைவக்குடும்பங்களும் உளளன. வேதங்கள், ஆகமங்கள், சாஸ்திரங்கள் முதலியவைகளைக் கற்பதறகு மாணவர்களும், பெற்றூர்க்ளும் விருமபுகிறார்களில்லை. ஏனெனில் வேணடியளவு பாடசாலைகள் இல்லை மேலும் சமயத்துறையில் உள்ள சரியை, கிரியை, யோகம், ஞானம் இவைகளில் தேர்நதவர்களுக்கு வருவாய்களும் குறைவாக இருக்கின்றன. அவர்கள் வாழ்க்கைச் செலவை ஈடு செய்ய பூர்விக சொத்துக்களை விரயம் செய்வதோடு உத்தியோகம், வியாபாரம், வைத்தியம், மாந்திரீகம், சோதிடம் முதலியவைகளிலும் ஈடுபடவேண்டியிருககிறது. ஆகையால் ஆலய கர்த்தர்களும், கிராமங்களிலுள்ள பெரியோர்களும் ஒன்று சேர்ந்து தாய்நாடாகிய இந்தியாவிலிருந்து வேதாகமங்களைச் சிறப்புற

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

குப் பணியாற்றுவதே சீரிய தொண்டாகும். இந்த நன்முயற்சி பெரும் பயன் விளைவிக்கும் வண்ணம் சைவசங்கங்களும சபைகளும் அன்பர்களும் உரிய முறையில உதவி புரிவார்களாக! ஊக்கமெடுத்து உழைப்பார்களாக.

---

யாழ்ப்பாணம் — வண்ணர்பண்ணை

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை உயர்நிலைப்பள்ளிஸம்ஸ்கிருதபாடவிதானம்

ஆரம்ப வகுப்பு 1-ம் வருடம்

1. ஆகமக் கிரியைகள்
1. சங்கல்ப்பம், 2. விக்கினேசுவர பூசை, 3. விக்கினேசுவர ஷோடச நாமாவளி, 4. விக்கினேசுவர பிரார்த்தனைச்சுலோகங்கள் 5. கண்டா பூஜை, 6. தீப பூசை, 7. கலசபூசை, 8. சங்கபூசை.

2. மனனப் பகுதி
1. விநாயக அஷ்டோத்திரம், 2. சிவாஷ்டோத்திரம், 3. பஞ்சமூர்த்தி தியான சுலோகங்கள், 4. விஷேத் தியான சுலோகங்கள்.

3, மந்திரங்கள்
1. ஆவாகன மத்திரங்கள், 2. ஷோடசோபசார மந்திரங்கள், 3. அப்லிங்க மந்திரங்கள்.

4. வாசிப்புப் பயிற்சி
1. சிவ ஸஹஸ்ர நாமாவளி, 2 சுப்ரமணியஸஹஸ்ரநாமாவளி.

5. இலக்கிய அறிவு
1. சபத மஞ்சரி - ஸர்வ நாம சப்தம் வரையும். 2. ஸம்ஸ்கிருத சிக்ஷா பிரதம சோபானம்

முதலாம் வகுப்பு 1-ம் வருடம்

1 ஆகமக் கிரியைகள்
1. மகாசங்கல்பம், 2. புண்ணியாக வாசனம், 3. சகலீகரணம், 4 சாமான்யார்க்கியம், 5. விசேஷார்க்கியம், 6. பஞ்சாஸ தார்ச்சனை, 7. துவார பூசை.

2 மனனப் பகுதி
1 தேவி அஷ்டோத்திரம், 2. சுப்பிரமணிய அஷ்டோத்திரம், 3 கணேசபஞ்சரத்தினம், 4 சிவ மானசிக பூஜை.

3 மந்திரங்கள்
1. புண்ணியாக வாசக மந்திரங்கள், 2. விசேஷ திரவியாகுதி மந்திரங்கள், 3. புஷ்பாஞ்சலி மந்திரங்கள்.

4 வாசிப்புப் பயிற்சி
விக்கினேசுவர பூஜா விதி, (சிவஸ்ரீ இ. கு. பூரணாநந்தேசுவரக்குருக்கள்)

5. இலக்கிய அறிவு
அபிநவ பாடாவலி (முதற் புத்தகம்) சப்தமஞ்சரி - முழுவதும்.

6. சோதிடம்
காலவிதானகச்சுருக்கம். (25 பாட்டுக்கள்)

---

காமராசர் கருத்துச்சிறப்பு

தொடர்ந்து அரசியற்பதவியில் ஒரு சிலர் இருப்பது நன்றல்ல, விலகித் தேசத்தொண்டு வேறு வழியிலாற்றுவது மேலானது; இக்கருத்துச் சென்னைப் பிரதமர் காமராசரது. இந்நாட்டின் றலைவர்கள் இதை ஆதரிப்பார்களா?

---

## மலை ஏற்றம் பார்ப்பவனே!

### "அளவையூர் - சஞ்சீவி"

ஓம் கணபதி ஓங்கார கணேசா
ஓங்கார கணேசா ஓங்கார கணேசா
உலகமெலாம் பொலிபவனே ஓங்கார கணேசா
உமை சிவனின் திருமகனே ,, ,,
நல மருளும் பெருமானே ,, ,,
ஞான சுகந் தரு வானே ஓங்கார கணேசா
வேல் வேல் சண்முகா வேல் வேல் சண்முகா
வெற்றி வேல் ,, ,, ,, ,,
1 கதிர மலைக் கநதனே ,, ,, ,,
கைலேசன் மைந்தனே ,, ,, ,,
அதி பதியே அர் மருகா ,, ,, ,,
அம்பிகையாள் பாலகனே ,, ,, ,,
2 குஞ்சரியாள் நாயகனே ,, ,, ,,
குறவள்ளி நாயகனே ,, ,, ,,
வெஞ் சமரம் செய்தவனே ,, ,, ,,
வெஸ்கணைகள் பெய்தவனே ,, ,, ,,
3 மாவைப் பிளந்தவனே ,, ,, ,,
மலையைத் தடிந்தவனே ,, ,, ,,
சேவற் கொடிக் குமரா ,, ,, ,,
தேவருக்கும் தேவனே ,, ,, ,,
4 பிரமனை நீ சிறையடைத்தாய் வேல் வேல் சண்முகா
பிரணவத்தின் பொருளுரைத்தாய் ,, ,, ,,
பரமனுக்குக் குருவானாய் ,, ,, ,,
பாற் குழந்தை வடிவானாய் ,, ,, ,,
5 எதிர் சூரர் குல மழித்தாய் ,, ,, ,,
எம கூட மியற்றுவித்தாய் ,, ,, ,,
கதிர்காம மலையினிலே ,, ,, ,,
கணபதியோ டிருப்பவனே ,, ,, ,,
6 காவடிகள் காண்பவனே ,, ,, ,,
காவியங்கள் பூண்பவனே ,, ,, ,,
மாவிளக்கை ஏற்பவனே ,, ,, ,,
மலை ஏற்றம் பார்ப்பவனே ,, ,, ,,
7 அன்பரிடம் நின்றவனே ,, ,, ,,
அண்ட மெலாம் சென்றவனே ,, ,, ,,
தென் பழநி யாண்டவனே ,, ,, ,,
தேங்கடம்பு பூண்டவனே ,, ,, ,,
8 ஆறு திசை சூழு மலை ,, ,, ,,
அதனடுவே கதிரமலை ,, ,, ,,
நீறு மலை சூரர் மலை ,, ,, ,,
நினை விருக்க நீ வருவாய் ,, ,, ,,
9 ஆனை மீது வருவாயே ,, ,, ,,
ஆதரவு தருவாயே ,, ,, ,,
கான மழை சொரிவாயே ,, ,, ,,
கலைக ளருள் புரிவாயே ,, ,, ,,

—தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரம் 11-8-63 — 17-8-63

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

புது முயற்சிகளில் வெற்றியும் இலாபமும் நிச்சயம். எதிரிகளை வெற்றிகொள்ள முடியும், செலவுகளும் பெருகும். சிறு உடல் நிலைக்கோளாறும் உண்டாம்-

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

உடல் நிலை திருப்திகரமாயிருக்காது. வயிற்றுக்குழப்பம், மனக்கவலை, பண நன்மை வார இறுதியில் இக்கட்டில் நண்பர் உதவி ஆகியவை ஏற்படும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், ௩ம் பாதம்.

உமது அலுவல்களில் கண்டனங்கள் எதிர்ப்புக்களைச் சந்திக்க வேண்டி வரும். நண்பர்கள் இனத்தவருடன் தப்பபிப்பிராயங்கள் ஏற்படும், வார இறுதியில் சில முன்னேற்றங்கள் நிச்சயம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்

நிலபுலங்களால் இலாபம் நிச்சயம். எதிரிகளுக்கு இடரும் உமக்குப் புகழும் நிச்சயம். குடும்பநிலை குழம்பலாய் இருக்கும், உடல் நிலை நிறைவற்றிருக்கும்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

இனத்தவர் நண்பருடன் சச்சரவு தொடரும் மன நிம்மதியீனம், அதிக செலவு ஏற்படும். எதிரிகளுக்கு இடையூறும் உமக்குப் புகழும் நிச்சயம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

ஞாயிறு திங்கள் எச்சரிக்கையோடு கழிய வேண்டும். மிகுதி நாட்கள் ஓரளவு சாதகமானவை. புதிய முயற்சிகள் தாமதப்பட்டு வெற்றிபெறும், தொழில் முயற்சிகளுக்கு மிகுதி வாரம் ஏற்றது.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

உமதெண்ணப்படி நடப்பது கடினம். செலவுகள் பெருகும். தொழிலளவில் நல்ல வாரம். நீர் போதியளவு ஈடு செய்யப்படுவீர், உடல்நிலை ஊறுபடும். திங்கள் மாலை செவ்வாய், புதன் எச்சரிக்கையோடு கழிய வேண்டும்,

**விருட்சிகராசி** விசாகம் 4-ப் பாதம் அநுஷம், கேட்டை.

நல்ல வாரம். தடைகளைத் தாண்டி வெற்றிபெறுவீர், நிலபுலக்களால் இலாபமும் உண்டாம், புதன் மாலை வியாழன் வெள்ளி மாலை எச்சரிக்கையோடு கழிய வேண்டும்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

உடல்நிலை பிரச்சினைக்குரியது, வேலையில் நிம்மதியீனம் ஏற்படும் நிலபுலங்களால் இலாபம் நிச்சயம். இறுதி இருநாட்களையும் எச்சரிக்கையோடு கழிக்குக.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ப பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

மன நிம்மதியீனமும் வீண்பழி கேட்டலும் தந்தைவழி உறவினரால் தொல்லையும் உண்டாம். சில காலம் உமது அலுவல்களில் கவனமாக நடந்துகொள்க.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

உடல்நிலைக் கோளாறு உண்டாம், அலுவலகத்தில் சிறு கலகங்கள் உண்டாம். பணமளவில் ஓரளவு நல்ல வாரம். புது முயற்சிகள் நல்ல வருவாய் தரும். எதிர்ப்பாலைச் சேர்ந்த நண்பர்கள் அதிக செலவு செய்வார்கள்,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

குடும்ப அலுவல்கள் குழம்பலாக இருக்கும். புது முயற்சிகள் தடங்கல்படும், உடல்நிலை பிரச்சினைக்குரியது, ஆனால் புகழும் சமூக வெற்றியும் நிச்சயம்,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காரம்பன் ஊர்காவற்றுறை
T. A. இராசையாபிள்ளை
கைம்பெண் எலிசபெத்
முத்தம்மா —வழக்காளி.
வழக்கு இல. M. B. 3853

எதிராக

சரவணை நாகமணி பூபாலசிங்கம் — எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3853-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1963-ம் வருடம் புரட்டாதி மாதம் 14 ம் திகதி (14-9-63) சனிக்கிழமை காலை 10–30ம்மணிதொடக்கம்அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா5404ம் 25-1-61 தொடக்கம் 3-4-62 வரைக்கும் ரூபா 4000 - க்கு 18 வீத வட்டியும் அதன் பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 291–45 சதமும். வட்டிக்கணக்கால் ரூபா 1520/- கட்டப்பட்டுள்ளது.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்த்றிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோயிற்பற்று சரவணை இறை "நெடுங்கேணி" நிலப் பரப்பு 4 குளி 13. கல்லாற் கட்டப்பட்ட கடைகளும் செய் பயிர் வான்பயிர்களும்கிணறும். எல்லை கிழக்கும் தெற்கும் ரேட்டு. வடக்கு கையொழுங்கை. மேற்கு இராமநாதர் நாகலிங்கம் பெண் சின்னம்மாவுக்கும் பங்காளருக்கும் மூத்ததம்பி மருதையினுருக்குமுரிய ஆதனங்கள்.

சே. பாண்டித்துரை
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
11/1, மொம்சாக் கட்டிடம்,
மேல்மாடி,
ஸ்ரான்லிவீதி யாழ்ப்பாணம்,
2-8-63.
M 110, 9-8-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஐக்கிய விளைபொருள்
விற்பனவுச் சங்கம்
உடுவில்
வழக்காளி.
இல M B 3522

எதிராக

1. சின்னையா கனகசபாபதியும்
2. வேலாயுதர் சின்னையாவும் பெண்
3. சின்னம்மா அனைவரும் கந்தரோடை

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3522ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணி 1963 ஞு ஆவணி மீ 31 உ (31–8–63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 849–98ம் இதற்கு 813-92 க்கு 21-7–60 தீர்வைத திகதி தொடக்கம் 8–2–61 வரை 100க்கு 5 வீத வட்டியையும் பின் முழுத தொகையும் இறுபடும்வரைக்கும் 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு 164–72½ சதம். இந்தத்தொகையில 203 ரூபா ஒரு சதம் குறைவாக

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு உடுவில் கோயிபற்று கந்தரோடை — தம்மாலை பரப்பு நில லாச்சம் 10ம் 8.06 குழியும் இது லொட் 3 ஆக பிளான் நம்பர் 61 A ல் 21-4-1937 ஆண்டில் உத்தரவு பெற்ற உலாந்தா M. அலோசியஸ் ஆல் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் நம்பர் 3502 வழக்கில் அணைக்கப்பட்ட பிளானுக்கு அமைய இதில் வடக்குப் பக்கமாக பரப்பு நில லாச்சம் 5 ம் வீடும் கிணறும் பயிர்களும். இதற்குஎல்லை கிழக்கு செல்லையா பெண் தங்கம்மாவின் ஆதனம். வடக்கும் மேற்கும் Dr. S சுப்பிரமணியத்தின் ஆத

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B, 2306.
மானிப்பாய் தெற்கு
1, S, அழகானந்தமும் பெண்
2, சகுந்தலாவும்
—வழக்காளிகள்.

எதிராக

கொக்குவில் கிழக்கு
1. பொன்னம்பலம் அப்பையாவும் பெண்
2. தங்கம்மாவும்
3. செல்லப்பா ஆறுமுகமும் பெண்
4. அன்னலெட்சுமியும்
—எதிராளிகள்.

உரும்பிராய்
1. நல்லையா இராசநாயகம் பெண் கமலலெட்சுமி
2. வல்லிபுரம் அப்பாத்துரையும் பெண
3. தங்கரெத்தினமும்

யாழ்ப்பாணம் ஓட்டுமடம்
4, கந்தப்பசேகரர் இரத்தின சபாபதி

கொக்குவில் கிழக்கு
5. கார்த்திகேசு வைத்திலிங்கம்
6. செல்லப்பா ஆறுமுகமும் பெண்
7, அன்னலெட்சுமியும்

யாழ்ப்பாணம் நல்லூர் வெள்ள வாய்க்கால்
8. வயிரவி வேலு,

இரண்டாம் எதிரியின் சட்ட சம்பந்தமான பதில் எதிராளி கொககுவில் கிழக்கு
9, பொன்னம்பலம் அப்பையா

யாழ்ப்பாண டிஸ்திறிககோட்டின் M.B, 2306-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகளை 1963-ம் ஞு புரட்டாதிமீ 7உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அந்தந்தக் காணிகளுக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 12380-ம். இன்னும் ரூபா 8000-க்கு 1958-ம் ஆண்டு ஆடி மாதம் 1-ந் திகதி தொடக்கம் 1959-ம் ஆண்டு புரட்டாதிமாதம் 9-ந் திகதிவரையும் 100-க்குப் 12%வீத வட்டியும், பின்பு கூட்டுத் தொகைககு இறுபடும் வரைக்கும் 100-க்கு 5% வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 464-70 சதமும்.

ஆதனங்களின் விபரம்:

1, வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோயிற்பற்று, கொககுவில் கிழக்கு இறை "நம்பிச்சம்பாகும், மறு பிரிவுகளும்" பர. நில. இலா. 44-ம் குளி 8 13/16-ம். கிணறும், பயிர் வகைகளும். வடக்கேயுள்ள கை ஒழுங்கையில் பங்கும். எல்லை கிழககு கே. நன்னித்தம்பியின் உரித்தாளரின் ஆதனம். வடக்கு சின்னத்தம்பி ஐயாத்துரையின் உரித்தாளரின் ஆதனமும். கை ஒழுங்கையும், மேற்கு சின்னப்பு அழககோனுக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனங்கள், தெற்கு சிதம்பரப்பிள்ளை சரவணமுத்துவுககும், மறுபேருககும் உரிய ஆதனங்கள். இதடங்கலும், இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப் பதிவு கந்தோரில் D 222/184-ம் இலக்கத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளது.

2. ஷை கொக்குவில் கிழக்கு இறை "அல்லைக்காடு" பர, நில. இலா. 33-ம் குளி 9 5/8-ம் இதில் 1948-ம் ஆண்டு தைமாதம் 25-ம் திகதி உலாந்தா மேஸ்தர் T. சின்னத்துரை அவர்களால் 235 B இலகக அளவு படத்தில் 2 என்னும் இலக்கத்தால் சுட்டப்பட்ட பிரிவிடப்பட்ட துண்டு பர, நில, இலா. 2, குறிதத 2 என்னும் இலக்கத்தில் சுட்டப்பட்ட துண்டிற்கு எல்லை கிழக்கு ரேட்டு. வடக்கு 1 – ம் நம்பர் துண்டு மேற்கு ஆறுப்பிள்ளை கந்தையாவிற்கும், பெண் இராசேஸ்வரிக்கும், இராமு செல்லத்துரைக்கும் உரிய ஆதனக்கள், தெற்கு 3-ம் நம்பர் துண்டு: இதடக்கலும் இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப் பதிவு கந்தோரில் D 192/141-ம்

னம். தெற்கு கனகசபைநாகலிங்கம் பெண் பொன்னம்மாவின் ஆதனம் இது இடக்கலும். பதிவு இலக்கம் H 280/284.

சி. செ. மார்க்கண்டு.
கொமிசனரும விலைமதிப்பாளரும்.
[illegible]
சித்தன்கேணி, 20-7-63.
M 108, 9-8-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மானிப்பாய் யென்கின்ஸ்
முத்துவேலு சிங்கநாயகம்
— வழக்காளி

எதிராக

இல. M. B. 3613
மானிப்பாய் தன்னை சதாசிவலம்
தங்கராசா —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டில் M. B. 3613-ம் இலகக வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1963-ம் ஆண்டு செப்டெம்பர் (புரட்டாதி) மாதம் 7-ம் திகதி (7-9-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபாய் 2754–54-ம் இதில் ரூபாய் 2508-54 க்கு 14-4-60 திகதி தொடக்கம் 1-12-60 திகதி வரைக்கும் 100 க்கு 10 வீத வட்டியும், பின்திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 195-37 சதம். இதில் ரூபா 1000 1962-ம் ஆண்டு ஆனி மாதத்தில் இறுபட்டது.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவிற்கோவிற்பற்று உடுவிலிறை "வழுக்கற்புலம்" நிலப் பரப்பு 7-ம் தெற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்கால் உரித்தும். எல்லை கிழக்கு சிதம்பரப்பிள்ளைமுருகேசுவின் ஆதனம். வடக்கு ஒழுங்கை மேற்கு மருதன் தில்லையனுக்கும் சின்னத்தம்பி கார்த்திகேசுவுக்குமுரிய ஆதனங்கள். தெற்கு தில்லையன்பெண் கதிராசியின் ஆதனம். இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer &
Licensed Auctioneer.
தெல்லிப்பழை, 15-7-1963,
M 106 9-8-63

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 5005
முல்லைத்தீவு சேன்மேரிஸ்ரேட்
1 ஆசிர்வாதம் சிங்கராயரும் பெண்
2 மேரி அந்தோனியாப்பிள்ளையும் —வழக்காளிகள்

எதிராக

நாரந்தனை
1 பேதுறுப்பிள்ளை கைம் பெண் பிலிப்பாசியும்
2 பேதுறுப்பிள்ளை அல்போன்சும் (தற்பொழுது மெயின் தெரு முல்லைத்தீவு).

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 5005-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்

இலக்கத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளது.

3. ஷை கொக்குவில் கிழக்கு இறை "அல்லைக்காடு" பர. நில. இலா. 33-ம் குளி 9 5/8-ம். இதில் 1948-ம் ஆண்டு தைமாதம் 25-ம் திகதி உலாந்தா மேஸ்தர் T. சின்னத்துரை அவர்களால் 235 B இலகக அளவு படததில் 1 என்னும் இலக்கத்தால் சுட்டப்பட்ட பிரிவிடப்பட்ட துண்டு பர. நில. இலா, 3 குளி 9 5/8-ம், குறித்த 1 என்னும் இலக்கத்தால் சுட்டப்பட்ட துண்டிற்கு எல்லை கிழக்கு ரேட்டு, வடககு ஆறுப்பிள்ளை கந்தையாவிற்கும் பெண் இராசேஸ்வரிக்கும் உரிய ஆதனம், மேற்கு ஆறுப்பிள்ளை கந்தையாவிற்கும் பெண் இராசேஸ்வரிக்கும் உரிய ஆதனம், தெற்கு இரண்டாம் நம்பர் துண்டு. இதடங்கலும். இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப்பதிவு கந்தோரில் D 165/128-ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அ. ஜெகநாதன்,
கொம்மிஷனர் &விலைமதிப்பாளர்.
16 A, அம்மன் ரேட்
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
M 104 9-8-63,

## சைவ அபிமானிகளுக்கு ஓர் வேண்டுகோள்

(-2ம் பக்கத் தொடர்ச்சி)

ஓதியுணர்ந்த அறிவாளிகளை இங்கு அழைத்து வந்து பிள்ளைகளுக்கு சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றை எங்கள் குழந்தைகளுக்கு ஓதச் செய்து அவர்களை இந்தச் சைவப்பணியில் ஊக்குவித்தால் எங்கள் சமயமும், சமூகமும் முன்னேறி நல்வாழ்வு வாழ வழிகாட்டி இகபர சுகங்களைக் கொடுக்கும்.

பிரசங்கங்களினாலும், புஸ்தகங்களினாலும் வளரக் கூடிய அறிவு தனிப்பட்ட முறையிலோ, சமூகங்களுக்கோ ஞானத்தைக் கொடுக்குமேயல்லாமல் எங்கள் சமயத்தில் கூறப்பட்ட சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய தீட்சைகளை மேலோங்கச் செய்ய முடியாது.

இந்த நெருக்கடியான நிலைமையில் நாங்கள் சரியை, கிரியை, யோகம் ஞானம் முதலியவைகளில் கவனம் செலுத்தாது விடுவோமானால் நமது சைவ சமயம் ஜாவா, இந்தோனேசியா, பாலித்தீவு, தாய்லாந்து, போனியோ, ஆபிரிக்கா, மலாயா முதலிய நாடுகளில் உள்ள சைவ சமயம்போல் பெயரளவில் மாறிவிடும் என்பதில் ஐயமில்லை.

எங்களால் முடிந்த அளவில் கூடியசீக்கிரம் ஒன்றுபட்டு ஒரு வித்தியாபீடத்தை நிறுவி தகுந்த ஆசிரியர்களை வரவழைத்து சிறுவர்களுக்கு வேதாகம கிரியைகளைப் படிப்பித்து ஈடுபடும்படி செய்யக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த நன்னோக்கத்தை முன்னிட்டு சிலாபம் ஸ்ரீவடிவாமபிகா சமேத முன்னநாதஸ்வாமி ஆலயத்தில் சோபகிருது ஞு ஆவணிமீ 9 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை (25-8 63) பகல் 2 மணிக்கு ஒரு மாபெருஞ் சபை கூடுவதை அறிந்து சந்தோஷமானோம்.

K. S. வைத்தீஸ்வரக் குருக்கள்
கதிரேசன் கோவில்,
குருணாக்கல்.

காணியை, 1963-ம் ஞு ஆவணி மீ 31-ந் உ சனிக்கிழமை முற்பகல் 10 தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபாய் 3570-83-க்கும் 16-8-62 தொடக்கம் 28-1-63 வரைக்கும் ரூபாய் 2500-க்கு 6 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 243-10 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோயிற்பற்று நாரந்தனை இறை "சாந்தை" நெற்பரப்பு இலா 51-ம் குளி 3-ம் எல்லை கிழக்கு சின்னையா கந்தையாவின் ஆதனம். வடக்கு பொன்னுச்சாமி பெண் முத்துக்குட்டிக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம் மேற்கு முடிக்குரியநிலம், தெற்கு ஐயாத்துரை பெண் கமலத்தின் ஆதனம். இதடங்கலின் 1/12 அல்லது 2/24 பங்கு பிறநீங்கலாக, 10/24 பங்கு. இவ்வாதனம் காணிப்பதிவு கந்தோரில் C282/131-ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அ. ஜெகநாதன்
கொம்மிஷனர் விலைமதிப்பாளர்.
16 A, அம்மன்ரேட்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்,
M. 103 2-8-63,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயம் போதிக்கும்...

(முதற்பக்கத் தொடர்ச்சி)

யாது. பரீட்சை முறைகளையும நாமே நடாத்தும நிலையும் சில வருடங்களுக்குள் வந்து விடும்,

சைவப்பெருமக்கள் சமய பாட போதனை மேற்கொள்ள உரியவர்களை ஆக்க ஊக்கமளித்து நீங்கள் தூண்டுதல் வேண்டும். சமயம் தெரியாதார் அதனை மேற்கொள்ளுவது அவசியமாகும். சமய போதனையை மேற்கொள்ளுவோர் அதன் அறிவைப் பெறுவதற்கு முன்வரல் வேண்டும். கட்டாயமாகச் சமய தீட்சை பெறல் வேண்டும். போதனை சாதனை இரண்டிலும் வல்லுனராக விளங்க வேண்டும். அப்பொழுதுதான் சமயக்கல்வி பூரணத்துவமடையும்

பாடசாலைகளில் மாணவர்கள் சமயபாட போதனை பெறுகிறார்களே தவிர சாதனை புரிவதில்லை. இதற்காகப் பாடசாலைகளின் அணித்தாயுள்ள ஆலயங்களுக்கு மாணவரை அழைத்துச் சென்று சைவச் சாதனை புரியப் பழக்குதல் வேண்டும். பாடசாலைகளில் சமயசம்பந்தமான விழாக்காலங்களை விடுதலை யென்று கருதுகின்ற அபிப்பிராயம் முற்றாக மாற்றப்படல் வேண்டும். அக்காலங்களில் மாணவர்களும் ஆசிரியர்களும் சமய அனுட்டான வழிபற்றிப் போதனை சாதனை இரண்டிலும் நிற்றல் வேண்டும்.

சமய பாடப் பாடத் திட்டத்தில் பல கருத்துக்கள் நிலவுகின்றன. இதனால் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடர்ப்பாடு உண்டாகின்றன. நாம் ஈழத்தில் பெரும்பாலும் சைவ சித்தாந்தக் கொள்கை உடையாரையே காணுகின்றோம். வேற்றுக் கொள்கையை ஆதரிப்பவர் நம்மில் சிலர் இருந்தாலும் சைவ சித்தாந்தக் கொள்கையை மறுப்பவர் வெறுப்பவர் எவருமில்லை. ஆகவே நம் சமய பாடத் திட்டத்தை, சைவ சித்தாந்தம் என்று கூறப் பின்வாங்குவது ஏனோ? நாம் இந்துக்கள் என்று கொள்வது சர்வ சாதாரணமாய் விட்டது. அது தவறு என்று உணராததேனோ?

சைவ சமயமே சமயம், பொய்வந்துழலும் சமய நெறி புகுத வேண்டா மென்ற போதனை குழந்தைகள் உள்ளத்தில் ஆரம்பத்தில் இடம் பெற வேணடும். தென்னாடுடைய சிவனே என்னாட்டவர்க்கும் இறைவன் என்ற ஆழமான கருத்து அத்திவாரம் நிலைத்தபின்பே மாணவர்கள் வேற்றுமத ஆராய்ச்சியில் விடப்படல் வேண்டும்.

சைவச் சான்றோர்களே, சைவப்பழங்குடி மக்களே சைவக்கொழுந்துகளே நாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்று நின்று காட்டிய நாவலர் வழியில் பணிபுரிந்த நாவலர் ஐயா அவதரித்த நாட்டில் நாம் வாழுகின்றோமென்றால் நாம் உண்மையில சைவவாழ்வு வாழ்ந்துதானே ஆகவேண்டும். நாவலர் ஐயா சிந்திய சைவக் கருத்துத்துறைகளில் சைவப் பயிரை வளர்க்கவேண்டு மென்று தங்களைச் சமயத்தின் பேரால் கேட்டு அமர்கின்றேன்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B 3845.
யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

பத்தைமேனி கதிரிப்பாய்.
விவசாய கூட்டுறவு விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கமும், இப்போ அழைக்கப்படும் மேற்படி ஊர் ஒத்து மூயலும் பலநோக்கு ஜனசமூகம்
—வழக்காளிகள்

எதிராக
பத்தைமேனி, அச்சுவேலி
கார்த்திகேசு கந்தையா
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிகோட்டில் M.B, 3845—ம இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1963—ம் ஆண்டு புரட்டாதிமாதம் (18-9-63)புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 765/- இன்னும் ரூபா 750-க்கு 20-1-61 தொடக்கம் 31-8-61 வரைக்கும் 100-க்கு 4 வீத வட்டியும் பின்பு கூட்டுத தொகைக்கு இறுபடும் வரையும் 100-க்கு 5 வீத வட்டியும். இதில் ரூபா 400/- கொடுபட்டது. கோட்டுச் செலவு ரூபா 169/- சதம் 26.

காணி விபரம்:
வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு. அச்சுவேலி கோவிற்பற்று பத்தைமேனி இறை, "அரசடி" பரப்பு கில, இலா, 14, குளி 12-ம் கிணறும், வான்பயிர், செய்பயிர்களும், பனைகளும், வடலியும். எல்லை கிழக்கு சின்னததம்பி கந்தையாவுக்கும், கணபதி நாகமுத்துவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் வடக்கு றகுநாதக்குருக்கள் குமாரசாமிஐயருககும், பெண் பூபதிஅம்மாவுககும, ஒழுங்கையும். மேற்கு கதிரித்தம்பி கைம்பெண் ஆச்சிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு வின்சன் கைம்பெண் பொன்னம்மாவுக்கும், பொன்னையா ஐயாத்துரைககுமுரிய ஆதனம். சொல்லப்பட்ட கிணற்றில் வட எல்லைக்காணிககுத் தண்ணீர்ப்பங்கு புறநீங்கலானவை. எஞ்சிய எல்லைககுள் அடங்கியவைகளும்,

தா. செல்லையா,
கொமிசனரும், விலைமதிப்பாளரும்
இல: 37.
கொளும்புத்துறை வீதி,
சுண்டிககுளி, யாழ்ப்பாணம்.
M 107 9-8-63.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

—:—

சுவாட்ஸ் ஒழுங்கை
சுண்டிக்குளி
1 E. V. N. எதிர்மன்னசிங்கி
— வழக்காளி

எதிராக
கதிற்றல்வீதி யாழ்ப்பாணம் காலஞ்சென்ற W. L. எதிர்மன்னசங்கியின் பதில் தத்துவகாரன் E. A. எதிர்மன்னசிங்கி.
— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட் M. B. 4093-ம இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1963—ம ஞு புரட்டாதி மீ 14 உ சனிக்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் ரூபா 2380. இதில் ரூபா 2000 க்கு 22-6-61 திகதி தொடக்கம் 18-6-62 திகதி வரைக்கும் 12 வீத வட்டியும் பின் திகதிதொடக்கம் இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 183 சதம் 50.

காணி விபரம்
சுண்டிக்குளிக் கோவிற்பற்று கரையாவூர் இறை வீரபத்திரன் புலமும் தாண்டவன் [illegible] நிலப்பரப்பு 3 மூன்றும் 228 இஸ்குயர் லிங்ஸ்சும் கல்வீடும் கிணறும் செய்பயிர்களும் எல்லை கிழக்கு E. எபிரகாமுக்குரிய ஆதனம், வடக்கு எலின்கிறீக் கோறியின் உருத்தாளிக்கும் மற்யவர்களுக்குமுரிய ஆதனம், மேற்கு டாக்குத்தர் A. W வேக்மன்ஸ்க்குரிய ஆதனம், தெற்கு றோட்டு. இதடங்கலிற் சேவையர் V. சண்முகலிங்கத்தின் பிளான் நிம்பர் 3580 இதில் 3-ம் லொற்றுக்கு போகவேண்டிய பாதை புறநீங்கலாய் மிகுதி அடங்கலும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
சித்தங்கேணி.
29-7-1963.
M 101 9-8-63.

### COMMISSION SALE
### விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக்கோட்டு

வழக்கு இல 7392

வழக்காளி தாமு வேலுப்பிள்ளை அல்வாய் வடக்கு
எதிராக: சிதம்பரப்பிள்ளை மாணிக்கம் அல்வாய் மேற்கு

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டார் எனக்கு அனுப்பிய கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ்க்காட்டப்படும் ஆதனம் 1963 ம் ஆ புரட்டாதி மீ 18ந் தேதி (18-9-63) புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமாக விருந்து என்னாற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன டாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று மணிவீரபாகு தேவன் குறிச்சி இறை அல்வாய் "கலத்தொல்லை" நில பர 8¼. இதற்கு எல்லை கிழக்கு சிதம்பரப்பிள்ளை கைம்பெண் இலட்சுமிப்பிள்ளைக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். வடக்கும் தெற்கும் ஒழுங்கை. மேற்கு குமாரர் ஆறுமுகத்திற்கும் மறுபேருக்கும்உடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகளும்வடலியும் யாவற்றிலும் சொரியலாய் 2/9 பங்கு.

2. ஷெ இறை "கூன் வேலந்தெணி" நில பர 23 7/8. இதற்கு எல்லை கிழக்கு ஆள்வாப்பிள்ளை பெண் கண்ணக்கை வடக்கு முருகர் கந்தையாவுக்கும் மறுபேருக்குமுடையஆதனம். மேற்கு கணபதியார் சண்முகமும் மறுபேருக்குமுடையஆதனம். தெற்கு ஒழுங்கை. இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகளும் வடலியும் யாவற்றிலும் சொரியலாய் 1/8 பங்கு.

3. ஷெ மளவராயகுறிச்சி 'இம்பிலானை' நில.பர. 3 1/4. இதற்கு. எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு கந்தன் ஏரம்பனுககு உடையஆதனம். மேற்கும் தெற்கும் கணபதியார் சண்முகத்திற்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைமரம் மற்றும் யாவற்றிலும் சொரியலாய் ½ பங்கு.

4. ஷெ மளவராய குறிச்சி "மூன்னையர்சிமா" நில.பர. 8, 1/4 இதற்கு எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை. வடக்கு பெரியன் முருகனுக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், மேற்கு கணபதியார் சண்முகத்திற்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம். பனை மரங்கள் யாவற்றிலும் சொரியலாய் 1/4 பங்கு.

| | |
|---|---|
| தீர்வைத்தொகை | 1240-00 |
| வட்டி 1000-க்கு 21-4-1962 ல் இருந்து 17-1-1963 வரை 8 வீதப்படி | 60-00 |
| 5 வீதப்படி 1300 க்கு 17-1-63 ல் இருந்து 16-7-63 வரை | 32-50 |
| கோட்டுச் செலவு | 203-40 |
| மொத்தம் | 1535-90 |

கா. முத்துக்குமாருஐயர்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer.
சங்கிதிவேல்,
பருத்தித்துறை. 25-7-63.
M. 100 9-8-63.

யாழ்ப்பாணம்
—ஐக்கிய இலாப நிதி—
1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்
க்ஷேமப்பணம் 12 மாசம். 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.
S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்

திருநெல்வேலி கிழக்கு
வைத்திலிங்கம தம்பிஐயா
—வழக்காளி
வழ. இல. MB 4644.

யாழ்ப்பாணம்,
திருநெல்வேலி கிழக்கு
1. செல்லப்பா பொன்னுத்துரையும் மனைவி
2. செல்லம்மாவும்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் MB 4644-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிககப்படும் ஒருதுண்டுக் காணி 1963-ம் ஞு செப்ரெம்பர் மீ 14உ (14-9-63) சனக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக் காணிககுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 2908-ம். மேலும் 2000 ரூபாவுக்கும் 22-2-62 திகதி தொடக்கம் 17-9-62 திகதிவரைக்கும் வருடமொன்றுக்கு 10% வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு 308 ரூபா 20 சதமும், கோட்டுச் செலவில் ரூபா 125 கொடுபட்டது

காணி விபரம்:
வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுத நல்லூர் கோயிற்பற்று நல்லூர் இறை 'கினைவான குடியிருப்பு சோமநாதன் வளவும் மற்றும் துண்டும்" நிலப்பரப்பு 2 குளி 6/32 லொட் 2 என அடையாளமிடப்பட்டதும் அதற்குரியவைகளும். இதற்கு எல்லை கிழககு ஆறுமுகம் மகள செல்லம்மாவினதும் மற்றவர்களினதுமாதனம், வடக்கு சங்கரப்பிள்ளை ஆசை அப்பாமூர்த்தியினதும் மற்றவர்களினதுமாதனம், மேற்கு சங்கரப்பிள்ளை ஆசைஅப்பாமூர்த்தியினுதனமும் ஒழுங்கையும் லொட் 1 என அடையாளமிடப்பட்டதும், தெற்கு 28-8-1957 ல் உத்தரவு பெற்ற அளவையாளர் J, சின்னத்துரை அவர்களால் 881/A இலககத்தில் தயாரிக்கப்பட்டு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 11529-ம் வழககில் அணைக்கப்பட்டதில் அடையாளமிடப்பெற்ற லொட்டுக்கள் 2 B யும், லொட் 1-ம் தம்பு சேனாதிராசாவின் மனைவி இராசம்மாவுக்குரியது, பதிவு இல. D: 255/248.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்.
Licensed Auctioneer & Valuer.
643, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
M 109 9-8-63

### பிரிவிடுதல் நொத்தீஸ்

யாழ்ப்பாண
டிஸ்திறிக்கோட்டில்

சுதுமலை வடக்கு
1, சின்னத்தம்பி ஆறுமுகமும் பெண்ணும்
2. வள்ளியம்மையும்
—வழக்காளி,
இல. P. 724.

எதிராக
சுதுமலை
1. பொன்னையா சண்முகம்
2. கனகர் கந்தையாவும் பெண்ணும்
3. சின்னதங்கச்சியும்
4. பொன்னையா ராசையா
5. செல்லர் சுப்பிரமணியமும் பெண்ணும்
6. ரத்தினமும்
7. பொன்னையா செல்வரத்தினம், —எதிரிகள்.

யாழ்ப்பாணம் பிஸ்கால் துரை அவர்கட்கு சுதுமலை "பலப்பதன் சிமா" நி. பர. இலா. 16½ என்னும் ஆதனம் அல்லது ஆதனங்களை 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படிகோட்டில் மேற்படி இலககத்தில் ஓர் பிரிவிடுதல் வழககு தொடர்ந்திருககின்றதென்று இத்தாலுமக் கறிவிக்கப்பட்டிருககின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1963-ம் ஞு புரட்டாதி மீ 10-ந் உ 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி
Sgd. K. N. Subramaniam
பிரதம லிகிதர்
1963-ம் ஞு ஜூலை மீ 6உ
M. 105 9-8-63.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 9-8-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org